புலவர் கா. கோவிந்தன்: மாடுகளுக்கு லாடம் இல்லாவிட்டாலும், உடம்பில் புண் இருந்தாலும் அது குற்றம் என்று கருதி சொந்தக்காரர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். ஆனால் மனிதர்கள் காலில் செருப்பு கூட இல்லாமல் வண்டிகளை இழுக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை அமர்த்துகிறவர்களுக்கு தண்டனை கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்பொழுதுகூட விதிகள் இருக்கின்றன; கை வண்டிகளில் இந்தனை பாரம், இவ்வளவு கனஅளவுக்கு மேல் எடுத்துச் செல்லக்கூடாது என்று விதிகள் இருக்கின்றன. ஆனால் அதைச் சுலபமாக அமுல் நடத்த முடிவதில்லை.

Educational Institutions (References to Castes)

* 31 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Chief Minister be pleased to state what steps the Government have taken to delete all references to castes in the forms used in the educational institutions?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Particulars relating to castes are required only in respect of pupils belonging to scheduled castes, scheduled tribes and backward classes who are eligible for educational concessions under the Madras Educational Rules.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, ஸ்டாட்டிஸ்டிகல் பர்பஸுக்கு என்று பிராமின், நான்-பிராமின் என்று வகைப்படுத்தி, அந்தந்த வகையில் யார் யார் இருக்கிறார்கள் என்று கணக்கு எடுக்க அரசாங்கத்திலிருந்து அல்லது டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் அலுவலகத்திலிருந்து பாரங்கள் அனுப்பப்படுகின்றன. இது உண்மையிலேயே ஜாதியை தூண்டுவதாக ஆகாதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் அளித்த விடை கல்வி ஸ்தாபனங்களை பொறுத்தது. அவை சம்பந்தப்பட்ட வரை பிற்பட்ட வகுப்பினர், ஹரிஜனங்கள், இவர்களைப்பற்றி மட்டும்தான் கணக்கு எடுக்கிறார்கள். வேறு ஜாதியைப்பற்றி கோருவது இல்லை.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, எல்லோருக்கும் இலவசக் கல்வி என்று ஏற்பட்ட பிறகு ஆண்டுதோறும் வருமானத்தைக் குறித்து சர்டிபிகேட் கொடுக்க வேண்டும் என்று கையாளும் முறை எதற்காக? இதனால் மக்கள் அனாவசியமான தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள் என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது பற்றிய தகவல் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கிறேன்.

Loans to goldsmiths

* 32 Q.—SRI RAMA ARANGANNAL (on behalf of Sri K. A. MATHIALAGAN): Will the Hon. the Minister for Industries be pleased to state the amount asked for by the State Government and